# தமிழ் நாடு தகவல் ஆணையம்

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி முதல் தளம்,, புது எண் 378, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை சென்னை-600018. (தபால் பெட்டி எண் 6405 தேனாம்பேட்டை)
*தொலைபேசி எண் 24312841.*

**வழக்கு எண்.14381/விசாரணை/2009**

**விசாரணை நடைபெற்ற நாள் 23.09.2009.**

| | |
|---|---|
| முன்னிலை: | முனைவர் (திருமதி) சாரதா நம்பி ஆரூரன்,<br>எம்.ஏ.,எம்.ஃபில்,,பி.எச்,டி.,<br>மாநில தகவல் ஆணையர் |
| மனுதாரர்: | திரு M.தூயமூர்த்தி,<br>எண்.3, விநாயகபுரம் 12–வது தெரு,<br>தண்டையார்பேட்டை, சென்னை – 600 081. |
| பொது அதிகார அமைப்பு: | பொதுத் தகவல் அலுவலர்,<br>மீன்வளத்துறை ஆணையர் அலுவலகம்,<br>தேனாம்பேட்டை, சென்னை – 600 006.<br><br>பொதுத் தகவல் அலுவலர்,<br>மண்டல இணை இயக்குநர்,<br>மீன்வளத்துறை, சென்னை – 600 028. |

*****

மனுதாரர் திரு M.தூயமூர்த்தி மற்றும் பொதுத் தகவல் அலுவலர்கள் திருமதி P.ரீனாசெல்வி, மீன்வளத்துறை துணை இயக்குநர், சென்னை–6, திரு G.சத்தியமூர்த்தி, மீன்வளத்துறை இணை இயக்குநர், சென்னை–28 மற்றும் திருமதி B.ஜெனிபர், மீன்வளத்துறை உதவி இயக்குநர், பொன்னேரி இன்று (23.09.2009) இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு வந்திருந்தனர்.

மனுதாரர் 03.10.2008 அன்று பொதுத் தகவல் அலுவலர், மீன்வளத்துறை ஆணையர் அலுவலகம், சென்னை அவர்களிடம் சில தகவல்களைக் கேட்டிருக்கின்றார். 04.11.2008 அன்று மனுதாரருக்குப் பதில் அளிக்கப்பட்டுள்ளது. முழுமையான தகவல்கள் பெறவில்லையென்று 08.12.2008 அன்று துறைக்கு மேல் முறையீடும் 25.06.2009 அன்று

ஆணையத்திற்கு மேல் முறையீடும் செய்ததன் அடிப்படையில் வழக்கு இன்று (23.09.2009) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

03.10.2008 அன்று சின்ன நத்தம் குப்பம் குறித்தும், பலகைத் தொட்டி மக்கள் தொகை குறித்தும் மனுதாரர் தகவல்களைக் கேட்டுள்ளார். மக்கள் தொகை குறித்து முதலில் 119 என்றும், பின்னர் 324 என்றும் முரண்பாடான தகவல்கள் தரப்பட்டன என்று மனுதாரர் கூறியதைப் பொதுத் தகவல் அலுவலரிடம் விசாரித்த போது 2000–ம் ஆண்டில் எடுத்த மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி 119 எனவும், கூட்டுறவு பிரவேசப் புத்தகம் (Society Admission Book) கணக்கின்படி 324 எனவும் அளிக்கப்பட்டதாகப் பொதுத் தகவல் அலுவலர் கூறினார். உரிய கோப்புகளை ஆணையம் பார்த்து எண்ணிக்கையை உறுதி செய்தது. மனுதாரர் கூட்டுறவு பிரவேசப் புத்தகத்தைப் பார்வையிட வேண்டுமென்று கூறினார். தகவல் அறியும் உரிமைச் சட்ட மனுவில் அது கேட்கப்படாததால், புதிதாக விண்ணப்பித்து உரிய கோப்புகளைப் பார்த்துக் கொள்ளும்படியும், கொடுக்கப்பட்ட தகவல்களில் முரண்பாடுகள் இருப்பின் உரிய இடத்தில் முறையிட்டுப் பரிகாரம் தேடிக் கொள்ளும்படியும் மனுதாரருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

**ஒப்புதல் பெறப்பட்ட நாள் 25.09.2009** **தமிழ்நாடு தகவல் ஆணையம்**
**ஆணையத்தின் ஆணைப்படி**

**(சு.மோகன தாஸ்)**
**உதவி பதிவாளர்**

பெறுநர்

**<u>வழக்கு எண்.14381/விசாரணை/2009</u>**

பொதுத் தகவல் அலுவலர்,
மீன்வளத்துறை ஆணையர் அலுவலகம்,
தேனாம்பேட்டை, சென்னை – 600 006.

பொதுத் தகவல் அலுவலர்,
மண்டல இணை இயக்குநர்,
மீன்வளத்துறை,
சென்னை – 600 028.

திரு M.தூயமூர்த்தி,
எண்.3, விநாயகபுரம் 12–வது தெரு,
தண்டையார்பேட்டை, சென்னை – 600 081.

*"ptl"*